10/35 12/5/71

செய்தி இதழாகப் பதிவு பெற்றது.

# தந்தி

விசேஷ பதிப்பு

இல- 1203 1971 மே 1 சனிக்கிழமை ★ ★ ★ விலை சதம் 5

Jaffna Sri Lanka RECEIVED 7-5-8 Periodicals Division Library

# சிங்கராஜா காட்டில் பீரங்கி கண்டுபிடிப்பு

## ஊரடங்குச் சட்ட நேரம்

கொழும்பு, மே 1

ஊரடங்குச் சட்டம் நாடு பூராவிலும் இன்று மாலை 7-30 மணி முதல் நாளை காலை 4-30 மணி வரையில் அமுலில் இருக்கும்-

## கைக்குண்டுகள், டைனமைட்

### வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டன

**பயங்கரவாதிகளைத் தேடிச் சிங்கராஜா காட்டிற்குள் புகுந்த பாதுகாப்புப் படையினர் நேற்று பீரங்கி ஒன்றைக் கண்டெடுத்தனர்.**

கைக்குண்டுகள், டைனமைட் மற்றும் வெடி மருந்துகளையும் இவர்கள் அங்கிருந்து கைப்பற்றி இருக்கிறார்கள்.

இந்தக் காட்டுப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் மேலும் தேடுதல் முயற்சிகளில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

இதே வேளையில் எல்பிட்டியாப் பகுதியில் இராணுவத்தினரும், கண்காணிப்புக் குழுவினரும் சேர்ந்து கிராமம் கிராமமாக பயங்கரவாதிகளைத் தேடி வருகின்றனர்.

நிந்தான கிராம வாசிகள் மூன்று பயங்கரவாத இயக்கத் தலைவர்களைப் பிடித்து பத்தேகம பொலீசில் ஒப்படைத்தனர். மாரவில்ல பொலீஸ் நிலையத்திலும் பல பயங்கரவாதிகளைக் கண்காணிப்புக் குழுவினர் ஒப்படைத்தனர். மற்றும் இந்திகெட்டியாவில் கண்காணிப்புக் குழுவினர் பல கைக் குண்டுகளைக் கண்டுபிடிக்க உதவினர்.

சிங்கராஜக் காட்டுக்குள் ஒளிந்திருக்கும் பயங்கரவாதிகளை இராணுவத்தினர் தொடர்ந்து தாக்கி வருகின்றனர். பல ஆயுதங்களையும் இராணுவத்தினர் கைப்பற்றினர்.

வவனியாவிலிருந்து கெப்பிட்டிக் கொல்லாவைக்குச் செல்லும் வீதியிலிருந்த தடைகள் அகற்றப்பட்டு, பஸ் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதிகள் கைப்பற்றியிருந்த இரண்டு பஸ்களையும் இராணுவம் மீட்டுள்ளது. தெலன் பிந்துனுவேவா பொலிஸ் நிலையம் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

மாத்தளையிலுள்ள பாதுகாப்புப் படையினர் எலகெராப் பகுதியை சோதனையிட்டு துவக்குகள், குண்டுகள், வெடி மருந்துகள் முதலியவற்றைக் கைப்பற்றினர்.

பாதுகாப்புப் படையினருக்கும் பொது மக்களுக்கும் இடையில் நல்ல ஒற்றுமை நிலவுவதாகவும், கண்காணிப்புக் குழுக்கள் பயனுள்ள சேவையாற்றுவதாகவும் இராணுவ வட்டாரம் தெரிவித்துள்ளது. (த-15)

## மீனாட்சி



என்னுங்க, சும்மா வாயை வைத்திருக்காமல் வதந்திகளைப் பரப்புவோரை அரசு துரத்திப் பிடிக்கின்றதே!


ஆமாங்க, இல்லாததையும், பொல்லாததையும் சொல்லுகின்றவர்களைத் துரத்திப் பிடிப்பது மாத்திரமல்லாமல் சவுக்கடியும் கொடுத்தால்தான் நினைத்து, நினைத்து வருந்தித் திருந்துவார்கள்.

## ஒருநாள் சம்பளம் வழங்குவர்

கொழும்பு, மே. 1

பெட்ரோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் தமது ஒரு நாள் ஊதியத்தை, அரசாங்கம் ஆரம்பித்துள்ள ஆயுதப் படையினர் நிவாரண நிதிக்கு வழங்குவது எனத் தீர்மானித்துள்ளனர். (ண-15)

தெனியாயப் பகுதியில், பயங்கரவாதிகள் தாம் பாவித்து வந்த லொறி ஒன்றைப் பாதையை மறைத்துக் குடை சாய்த்து வைத்திருக்கின்றனர். (ண)



## சுவீப் முடிவுகள்

கொழும்பு, மே. 1

இம் மாதம் 18-ம் திகதி இழுக்கப்பட இருந்த தேசிய லொத்தர் சபையின் 344-வது தேசிய சுவீப் சீட்டிழுப்பு தேசிய லொத்தர் சபை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

பரிசுபெறும் சுவீப் டிக்கட்டுக்களின் இலக்கங்கள் வருமாறு:—

முதலாம் பரிசு:
**20 N 0619**
ரூபா 50,460

இரண்டாம் பரிசு:
**16 V 0530**
ரூபா 20,184

மூன்றும் பரிசு:
**07 E 0400**
ரூபா 5,046

(4-ம் பக்கம் பார்க்க)

## தெனியாய கிராம சபை

தெனியாய கிராம சபையுடன் இதுவரை ஆறு உள்ளூராட்சி மன்றங்களை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது. பிரஸ்தாப கிராம சபையின் நிர்வாகம் மாத்தறை உதவி உள்ளூராட்சிக் கமிஷனரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர்கள் ரிமாண்டில்

பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஏழு இளைஞர்களை ஆனைமடுவ பொலீஸ் இன்ஸ்பெக்டர் குலத்திலக புத்தளம் மாஜிஸ்திரேட் கே. பாலகிட்ணர் முன்னிலையில் ஆஜர் செய்தார்.

இந்த வாலிபர்களில் மூவர் ஆசிரியர்கள் என நீதிமன்றத்தில் வைத்து அறியப்பட்டது.

சந்தேக நபர்களில் மூவரை ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்ட மாஜிஸ்திரேட் மற்ற நால்வரையும் தலா 150 ரூபா பிணையில் விட உத்தரவிட்டார்.

இவர்களில் ரிமாண்டில் வைக்கப்பட்ட மூவரும் மூன்று துப்பாக்கிகளை அபகரித்த குற்றத்திற்கும் ஆளானவர்கள் என நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. (12-தூ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கணவர் பிணமாக விழுந்து கிடந்தார்

## மரணவிசாரணையின் போது பெண் சாட்சியம்

நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக அவரது மாமனாரும், மைத்துனரும் கைது செய்யப்பட்டுள்ளனர்-

இச்சம்பவம் சிலாபம் மாவட்டத்திலுள்ள கல்முடுவ என்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளது. மரணம் குறித்து சிலாப மேலதிக நீதவான் சம்பவம் நடைபெற்ற இடத்தில் மரண விசாரணை நடாத்தினர்.

மரண விசாரணையில் காலஞ்சென்றவரின் மனைவி திருமதி ஜி. எச். ஏ. சலோ நோனா (30 வயது) சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:—

"சம்பவம் நடைபெற்ற தினம், எனது தந்தை டேவிட் சிங்கோ, எனது கணவரையும் பிள்ளைகளையும் என்னையும் பகல் சாப்பாட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

"நாங்கள் பகல் பன்னிரண்டு மணியளவில் தகப்பனார் வீட்டுக்கு சென்றோம். அங்கு எனது தாயார், சகோதரன், அவருடைய மனைவி, எனது சகோதரி உட்பட விஜயசேன என்பவரும் இருந்தனர்.

மூன்று போத்தல் சாராயமும் கொண்டு வரப்பட்டிருந்தது. சாப்பிட்டு முடிந்த பின்னர் எனது சகோதரன், எங்களை இரவுச் சாப்பாட்டுக்கு வரும்படி அழைப்பு விடுத்தார். நானும் எனது தாயாரும் முன்னதாகவே, சமைக்க உதவி புரியும் நோக்கத்தோடு சென்றோம். கணவன், அதற்குப் பிறகுதான் வந்தார்.

"எனது கணவரும், தகப்பனாரும் மாலை 5 மணி முதல் சுமார் இரவு 8 மணி வரை தொடர்ந்து குடித்தனர். எனது சகோதரனும் குடித்தார்.

"மூவருக்கும் இடையே வாக்கு வாதம் ஏற்பட்டது. தான் வீட்டுக்கு போவதாகக் கூறி விட்டு "கேட்" வரை சென்ற எனது கணவனை, தகப்பனார் பிடித்து மீண்டும் வீட்டுக்குள் கொண்டு வந்தார். இரவு 10 மணியளவில் நானும் பிள்ளைகளும் எம் வீட்டுக்கு சென்று விட்டோம்.

"காலை 3 மணியளவில், எனது தாயார் வந்து எனது கணவர் அபாயமான நிலையிலிருப்பதாக என்னிடம் கூறினர். காலை 6 மணிக்கு சகோதரனின் வீட்டை அடைந்தேன். அங்கு எனது கணவன் பிணமாக விழுந்து கிடப்பதைக் கண்டேன்.

"என்னை அருகே வர வேண்டாம் என்றும், வந்தால் என்னையும் கொன்று விடுவதாக தகப்பனார் பயமுறுத்தினர். அவ்வமயம் எனது சகோதரன் அங்கு இருக்கவில்லை.

"பிறகு, நான் உடனடியாக எனது மகன் "கீர்த்தி"யை பொலீஸ் நிலையத்திற்கு முறையிடுமாறு அனுப்பினேன். இவர்களுக்கிடையில், இதற்கு முன்னர் எவ்வித தகராறும் இருக்கவில்லை. அதிகமாக மது அருந்தியதே சம்பவத்திற்கான காரணமாகும்".

காலஞ்சென்றவரின் மாமியாரான ஊசி நோனாவும் சாட்சியம் அளித்தார்.

சிலாபம் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சண்முகம் மகாதேவா பிரேத பரிசோதனை நடத்தினர்.

ஸ்தலத்தில் மரண விசாரணை நடத்திய மேலதிக நீதவான் "கொலை" எனத் தீர்ப்பு வழங்கினர்.

இது சம்பந்தமாக காலஞ்சென்றவரின் மாமனரும், மைத்துனரும் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். *(த-129-ச)

## பன்னிரண்டு பேர் சூதாடி ஒருவர் கொல்லப்படல்

இளைஞர் ஒருவரை 11 பேர் ஒன்று சேர்ந்து துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தினராம். அவர் நிலத்தில் விழுந்து துடிதுடித்துக் கொண்டிருக்கையில் அதே நபர்கள் அவரைப் பொல்லால் அடித்துக் கொன்றுள்ளனராம்.

இப்பரிதாப சம்பவம் மீகாத்தென்ன பொலீஸ் பகுதியில் உள்ள பாலகஹேவச என்ற இடத்தில் நடைபெற்றுள்ளது.

ஆர். எச். பியதாசா என்ற 22 வயது இளைஞரே இவ்வாறு மரணமானவர். இவரும் முன்கூறிய 11 பேரும் சேர்ந்து பணத்திற்காக சீட்டாட்டம் போட்டுக் கொண்டிருந்தனராம். திடீரென எழுந்த சிறு தகராறே பூதாகாரமாக உருவெடுத்துக் கொலையில் முடிவுற்றதாகச் சொல்லப்படுகின்றது.

இது சம்பந்தமாக 11 சந்தேக நபர்களையும் தேடி பொலீஸார் வலை வீசியுள்ளனர். (3)

## பயங்கரவாதிகள் பாட வகுப்புக்குச் சென்றவர்கள்

பயங்கரவாதிகள் நடத்தி வந்த வகுப்புக்களுக்குச் சென்று வந்ததாகக் கூறப்படும் 2 இளைஞர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இது பற்றிய முழு விபரமும் பின் வருமாறு:—

தலவத்து கொடையைச் சேர்ந்த 2 இளைஞர்கள் பயங்கரவாதிகள் நடத்தி வந்த பாட வகுப்புக்களுக்கு சென்று வந்த தகவல் வெலிக்கடை பொலீஸாருக்குக் கிட்டியது.

இதைத் தொடர்ந்து வெலிக்கடை உதவி இன்ஸ்பெக்டர் திரு. ரி. பெரேரா தலைமையிலான பொலீஸ் கோஷ்டியொன்று சந்தேகத்தின் பேரில் 2 இளைஞர்களைக் கைது செய்தது.

இரு இளைஞர்களும் கொழும்பு மேலதிக நீதவான் திரு. நந்தா விஜயசேகரா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இருவரையும் மே மாதம் 12-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவு போட்டார்.

பயங்கரவாதிகள் பாட வகுப்புகளுக்குச் சென்று வந்தவர் எனக் கைது செய்யப்பட்ட மற்றும் ஒரு இளைஞரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (3)

## ஆஸ்மா மருந்து அரசின் பரிசு பெற்றது

லண்டன், ஏப். 30

ஆஸ்மா நோயினால் அவஸ்தைப்படுபவர்களுக்கு ஒரு புதிய மருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆஸ்மா நோய் ஏற்பட்டபின் அதற்குச் சிகிச்சை செய்வதைவிட, அந்நோயின் அறிகுறிகள் ஏற்படுவதையே முற்றாகத் தடைசெய்து, அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்ள இந்தப் புதிய "இன்ரால்" எனப்படும் மருந்து உதவுகிறது. தொழில் நுட்பத் துறையில் இம்மருந்து ஒரு முக்கிய கண்டு பிடிப்பாகக் கருதப்படுகிறது. இதனை உற்பத்தி செய்த பிஸன்ஸ் கம்பனிக்கு இவ்வருடத்திய அரசியின் பரிசில் வழங்கப்பட்டிருக்கிறது.

## அசெட்டிக் அசிட் குடித்து தற்கொலை செய்துள்ளார்

கணவனை "அசெட்டிக் அசிட்" அருந்தி விடாது தடுத்த மனைவியின் கை வெந்து விட்டது என்று கிரியெல்லையைச் சேர்ந்த முதலிகே சோமசிரி (35) என்பவரின் மரணம் குறித்து கொழும்பு திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எகர்டன் வீரக்கோன் நடத்திய மரண விசாரணையில் கூறப்பட்டது.

காலஞ்சென்றவரின் மனைவி ஏ. டி. இயுலின் நோனா சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:—

கடந்த ஏப்ரல் மாதம் 18-ம் திகதி காலஞ்சென்றவர் பிற்பகல் 1-30 மணியளவில் கசிப்பு அருந்தி விட்டு குடி போதையில் வீட்டுக்கு வந்தார். பிறகு வீட்டிலிருந்த "அசெட்டிக் அசிட்" போத்தலை எடுத்து அதை குடிக்க ஆரம்பித்தார். அதை தடுக்க நான், எத்தனித்த போது போத்தல் கீழே விழுந்தது. "அசிட்" பட்டு எனது கையும் வெந்து விட்டது.

கணவரை இங்கிரியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம். அங்கிருந்து கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு காலமானார்.

ஷீட் ரப்பர் செய்வதற்காகவே "அசெட்டிக் அசிட்" வீட்டுக்கு கொண்டு வரப்பட்டதெனவும் சாட்சி தெரிவித்தார்.

மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (129—ச)

## மனைவியின் தேநீரால் கணவன்மரணம்?

மனைவி தயார் செய்து கொடுத்த தேநீரை அருந்திய கணவர், சுகவீனமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் மரணமடைந்தார்.

இச்சம்பவம் சிலாபம் வட்டாரத்திலுள்ள ஓர் இடத்தில் நடைபெற்றுள்ளது.

திருமணம் செய்து கொண்ட நாள் முதல் கணவன் – மனைவி உறவு சந்தோஷமாக இருக்கவில்லை எனவும், எந்நேரமும் தன்னுடன் மனைவி வீண் சண்டைக்கு வந்ததாகவும் காலஞ்சென்றவர் இறப்பதற்கு முன் கொடுத்த முறையீட்டில் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

மரண விசாரணையின் பின்னர், திடீர் மரண விசாரணை அதிகாரி, மரணம் குறித்து புலன் விசாரணை நடத்துமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சடலம் பரிசோதனை செய்த பின் சில உறுப்புகள் இரசாயனப் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (129—ச)

## ஐந்து வருடக் கடுழியச் சிறை

சிலாபம் வட்டாரத்தைச் சேர்ந்த நாரக்கலி என்னுமிடத்திலுள்ள சுப்பிரமணியம்பிள்ளை முத்துசாமி என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த மூஹம்மத் சுல்தான் அப்துல் ஜப்பார் என்பவரைக் கொலை செய்த குற்றத்திற்காக நீர்கொழும்பு சுப்ரீம் கோர்ட் நீதவான் திரு. ஏ. எல். எஸ். சிரிமான்னே, எதிரிக்கு 5 வருட கடுழியச் சிறைத் தண்டனை விதித்தார். (129–ச)

### பயன்படுவதாக

அங்கவீனர்களுக்குத் தொழிற் பயிற்சி அளிக்கச் சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதன்படி அவரவர் தகுதிக்கேற்பத் தொழிற் பயிற்சிகள் அளிக்கப்பட இருக்கின்றன. தொழிற் பயிற்சி முடிந்ததும் இவர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடிக் கொடுக்கப்படும். அல்லது சொந்தமாகத் தொழில் செய்ய விரும்புவோருக்குத் தேவையான எந்திரமும், மூலப்பொருள்களும் பணமும் வழங்க அமைச்சு தீர்மானித்துள்ளது. இரந்துண்டு வாழ்வதையும், அண்ணன், தம்பி, சுற்றத்தவர் தயவில் வாழ்வதையும் நிறுத்தவே சமூக சேவைகள் அமைச்சு இத்திட்டத்தை தயாரித்து வருகின்றது. விரைவில் இத்திட்டம் நடைமுறையில் வந்து அங்கவீனர்கள் யாவருக்கும் பயன்படுவதாக.

தந்தி

## பாடசாலை அதிபர் ஒருவர் விளக்கமறியலில் உள்ளார்

பாடசாலை அதிபர் ஒருவரும் பயங்கரவாத இயக்கத்தில் ஈடுபட்டிருந்தார் என்பதற்காகக் கைது செய்யப்பட்டு, விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மாத்தறை நீதவான் முன்னிலையில் இந்த மகா வித்தியாலய அதிபர் ஆஜராக்கப்பட்டார்.

அவரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதவான் உத்தர விட்டார். (த-15)

### கைமேல் பலன்!

விவாகம் நடைபெற, கொடியவர்களை அடக்க, வேண்டியவர்களை வசியமாக்க, வேண்டாதவர்களை ஒதுக்க, கணவன் மனைவி பிணக்குகள் நீங்க, வியாபாரம் முன்னேற்றமுடைய ஆகியவற்றிற்கு மந்திரம் செய்து தருவேன். விபரங்களுக்கு எழுதவும்.

பி. எம். திசாநாயக்க

103, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை மருதானை, தொ. பே. 33955

# கண்டக்டரிடம் இருந்து தாபரிப்புக் கோரல்

## மணமாகி 5 வருடங்கள் சென்றும் பிள்ளை இல்லை

"சார், இவர்கள் இருவரும் மண முடித்து ஐந்து வருடங்கள் ஆகின்றன- எனினும் பிள்ளைகள் இல்லை- இப்பொழுது கணவருக்கு மனைவி வேண்டாதவளாகி விட்டாள்-"

கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் டீ. ஈ. தர்மசேகர முன்னிலையில் விசாரிக்கப்பட்ட தாபரிப்பு வழக்கில் ஆஜரான வழக்கறிஞர் நிவ்டன் வந்துராகல மேற்கண்டவாறு கூறினர்.

தாபரிப்பு வழக்கில் பொரலஸ்கமுயில் வசிக்கும் உயரமான, பருமனான பெண்மணியான, தயாவதி அபயசிங்க என்பவர் மனுதாராவார். இலங்கை போக்குவரத்துச் சபையில் பஸ் கண்டக்டராக உள்ள இம்புல்லே ஹீன் முதியன்ஸேலாகே பொடி மாத்தயா என்பவர் எதிர் மனுதாராவார்.

"பொடி மாத்தயா எனது நல்ல கணவர்" என தயாவதி நீதிமன்றத்தில் கூறி இருந்தார்.

"1965 பெப்ரவரி மாதம் 19-ம் திகதி அவரைத் தான் மணமுடித்ததாகவும். விவாகம் முடிந்து ஐந்து வருடங்களாகியும் பிள்ளை இல்லையென்றும் அவர் கூறி இருந்தார்.

ஐந்து வருடங்கள் குடும்பம் நடத்திய அவருக்கு, அதற்குப் பிறகு நான் வேண்டாதவளாகி விட்டேன். கடைசியாக 1970 ஜனவரி 19-ம் திகதியன்று எனக்கு உண்ண, உடுக்கத் தருவதை அவர் நிறுத்தி விட்டார் என்றும் மனுதார் கூறி இருந்தார்.

"எதிர்மனுதார் பஸ் கண்டக்டர். மாதம் ரூபா நானூறு சம்பளம் பெறுகிறார். அதனால் அவரிடம் இருந்து தாபரிப்பு பணமாக மாதம் நூறு ரூபா பெற்றுத் தரவேண்டும்" எனவும் மனு கோரி இருந்தார்.

மனுதாரும், எதிர்மனுதாரும் விசாரணையின் போது நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தனர். மனுதார் சாரியும், கை கட்டையான சட்டையும் அணிந்து காணப்பட்டார். எதிர்மனுதாரோ சாரமும், சேர்ட்டும் அணிந்து மிகவும் சாதுவான தோற்றத்தில் காணப்பட்டார்.

மாஜிஸ்திரேட்:- "மனுதார் நல்ல மனைவி என்பதை ஏற்றுக் கொள்கிறீரா?"

எதிர்மனுதார்:- "ஆம் சார்"

மாஜிஸ்திரேட்:- "அப்படியானல் ஏன் பிரிந்திருக்கிறீர்கள், சேர்ந்திருப்பது கூடாதா?"

எதிர்மனுதார்:- "சேர்ந்திருக்க நான் விரும்பவில்லை. எனக்கு அவர் வேண்டாம்".

மாஜிஸ்திரேட்:- "அப்படியானல் தாபரிப்பு செலுத்த வேண்டி வரும். பிள்ளை இருக்கிறதா?"

எதிர்மனுதாரின் வழக்கறிஞர்:- "மணம் முடித்து ஐந்து வருடங்கள் ஆகின்றனவாம். பிள்ளை இல்லை சார்!"

வழக்கு விசாரணையின் போது ஒரு தொகையை குறிப்பிடுவதாகக் கூறிய மாஜிஸ்திரேட் அடுத்த மாதம் 29-ம் திகதி நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகுமாறு இரு தரப்பாரையும் கேட்டுக் கொண்டார். *(த-12)

## 'கணவர்என்னில்அன்பில்லை நான் அழகற்றவளாம்'

அவருடன் வாழ்க்கை நடத்த என்னல் முடியாது. அவர் என் மேல் அன்பு காட்டுவதில்லை. நான் அழகற்ற காரணத்தினல்தான் இவ்வாறு செய்கிறார். அவருக்கு ஒரு கள்ளக் காதலி இருக்கிறாள். அவள் மிகவும் அழகி.

இரத்தினபுரி பிரதம நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கு விசாரணை ஒன்றின் போது, வழக்கைத் தாக்கல் செய்திருந்த ஒரு பெண் இவ்வாறு கூறினள்.

தனது கணவரான டி. பெருமாள் என்பவருக்கு எதிராக, அவரது மனைவி இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

தனக்கும் தன் ஐந்து குழந்தைகளையும் வளர்ப்பதற்கு கணவனிடம் இருந்து தாபரிப்புப் பணம் பெற்றுத் தரும்படி மனுதார் கேட்டிருந்தார்.

மாஜிஸ்திரேட்:- என்ன இது? ஏன் இப்படி பிரிந்திருக்கிறீர்கள்? ஒற்றுமையாக சேர்ந்து வாழ உங்களால் முடியாதா?

எதிர்மனுதார்:- நான் எனது மனைவியுடனும் குழந்தைகளுடனும் சேர்ந்து வாழத்தான் ஆசைப்படுகிறேன். நடந்ததெல்லாவற்றையும் மறந்து பழையபடி என்னுடன் வந்து வாழும்படி மனுதாருக்குச் சொல்லுங்கள், ஐயா!

மனுதார்:- ஐயோ! என்னல் முடியாது. எனது கணவரது குணநலன்கள் சரியில்லை. அவர் என்னை விரும்புவதில்லை. என் மேல் அவருக்கு அன்பில்லை. அவருக்கு கள்ளக் காதலி ஒருத்தி இருக்கிறாள்.

மாஜிஸ்திரேட்:- குழந்தைகள் ஐந்து பேரும் யாருடன் இருக்கிறார்கள்?

எதிர்மனுதார்:- என்னிடம் இரண்டு குழந்தைகள் இருக்கின்றன. அவர்களில் ஒரு குழந்தையை தனியார் விடுதியொன்றில் வைத்திருக்கிறேன். மற்ற மூன்று குழந்தைளும் என் மனைவியுடன் உள்ளன.

மாஜிஸ்திரேட்:- மனைவியும், குழந்தைகளும் உம்முடையது என்று ஏற்றுக் கொள்கிறீரா?

எதிர்மனுதார்:- ஆம் சுவாமி. ஐந்து குழந்தைகளும், மனைவியும் என்னுடையவர்கள் என்று ஏற்றுக் கொள்கிறேன்.

மாஜிஸ்திரேட்:- சரி அப்படியானல், ஒவ்வொரு குழந்தைக்கும் 25 ரூபா வீதம், மாதம் 75 ரூபா கொடுப்பதற்கு நீர் விரும்புகிறீரா?

எதிர்மனுதார்:- எனக்கு மாதாந்த வேதனமாக 250 ரூபா மட்டுமே கிடைக்கிறது. இதனல் இந்தப் பெரிய தொகையைக் கொடுப்பதற்கு என்னல் முடியாது. மாதம் 50 ரூபா என்னல் கொடுப்பதற்கு முடியும்.

மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் சேர்த்து மாதா மாதம் 60 ரூபா தாபரிப்புப் பணமாக வழங்கும்படி தீர்ப்பளிக்கப்பட்டது. (த-4-ரூ)

## என் சீதனம் ஐம்பதினயிரம் ரூபாவையும் தந்தருள்க!

"பிரதிவாதி எனது கணவன். அவர் என்னை திருமணம் செய்து கொண்ட போது சீதனமாக ஐம்பதினயிரம் ரூபாயும், வீடொன்றும், வளவொன்றும் எனது பெற்றோரால் கொடுக்கப்பட்டது-. திருமணத்தின் பிறகு ஒரு மாத கால வாழ்க்கை நடத்திய பின்னர் எங்களுக்கிடையே சிறு சிறு தகராறுகள் ஏற்பட்டுள்ளன. அவர் என்னை பலவாறுகத் தாக்கியும் உள்ளார்" என்று சிலாப நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கு ஒன்றில் சாட்சியமளித்த வாதியான பெண் கூறினர்.

இளம் பெண் ஒருத்தி திருமணத்தின் போது தன் கணவருக்கு வழங்கப்பட்ட சீதனப் பணத்தை தன்னிடம் மீண்டும் பெற்றுத் தரும்படியும் விவாகரத்து வழங்கும்படியும் கோரி கணவருக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"பிரதிவாதி என்னுடன் நடந்து கொண்ட விதத்திலிருந்து அவர் எனது சீதனத்திற்கு ஆசைப்பட்டு என்னைத் திருமணம் செய்து கொண்டாரே தவிர என்னை விரும்பித் திருமணம் செய்து கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது.

நீதவான் மேல் விசாரணையை மே மாதம் முதலாம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (129-ச)

## பாலம் ஒன்றை உடைக்க முயன்ற பயங்கரவாதி

பாலம் ஒன்றை உடைப்பதற்குத் தாம் முயற்சி செய்ததாக பயங்கரவாதி ஒருவர் ஒப்புக் கொண்டார். தமது முயற்சி தோல்வி அடைந்ததைக் கண்டு, சரணகதி அடைந்தவர்களில் இவரும் ஒருவர்.

தெனியாய பகுதியில் பென கமுவ என்னும் இடத்திலுள்ள பாலத்தை உடைப்பதற்குத் தாம் முயன்றதாக, அப்பகுதியில் சரணகதி அடைந்த ஒருவர், பாதுகாப்புப் படையினரிடம் ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்துள்ளார்.

அநேக பகுதிகளில், கடந்த 24 மணித்தியாலங்களில் பெருந்தொகையான பயங்கரவாதிகள் சரணடைந்துள்ளனர் எனப் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம், கம்புறுபிட்டிய, குளியாப்பிட்டி, மாவனல்ல, பொலன்னறுவ, குருநாகல் ஆகிய பகுதிகளிலும் பெருந்தொகையானேர் சரணகதி அடைந்துள்ளனர்.

நாட்டில் பெருமளவில் பாதிக்கப்பட்ட பிந்தெனியா பகுதியில் பயங்கர இயக்கத்தில் ஈடுபட்ட அநேகர் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்துள்ளனர்.

பிந்தெனியாப் பகுதி இப்பொழுது இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது.

பயங்கரவாதிகளைக் கண்டு பிடிப்பதில் பொதுமக்கள் மிகவும் உற்சாகமாக பாதுகாப்புப் படையினருடன் ஒத்துழைத்து வருகின்றனர். பாதுகாப்புப் படையினருடன் இவர்கள் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

பாதுகாப்புப் படையினருடன் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கண்காணிப்புக் குழு அங்கத்தவர் ஒருவர், தொடங்கஸ்லந்தையில் பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பொது மக்களின் தகவல்களின்படி பயங்கரவாதிகளையும், கைக்குண்டு, டைனமைட், துவக்கு போன்ற ஆயுதங்களையும் பாதுகாப்புப்படையினர் கைப்பற்றினர். (த-15)

## 9 சீனி மூடைகள் வைத்திருந்தவர் பிணையில்

சட்ட விரோதமான முறையில் ஒன்பது சீனி மூடைகளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் புத்தளம் மாஜிஸ்திரேட் கே. பாலகிட்னர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட இருவருக்கு தலா 750 ரூபா வீதம் பிணை விதிக்கப்பட்டது.

நொச்சியாகமையைச் சேர்ந்த ஏ. எல். கொரனேலிஸ் சில்வா, எம். பி. ஜயலத் ஆகிய இருவருக்கும்தான் பிணை விதிக்கப்பட்டது.

இவர்கள் இருவரும் ஒன்பது சீனி மூடைகளைப் புத்தளத்தில் உள்ள வர்த்தக நிலையமொன்றுக்கு விற்பனை செய்ய கொண்டு வந்த போது கைது செய்யப்பட்டதாக புத்தளம் பொலீஸ் நிலைய அதிபர் ஷெல்டன் பெரேரா நீதிமன்றத்தில் கூறினர். (12-ரூ)


### பெண்களுக்கு மட்டும்!



எக்காரணத்தை முன்னிட்டும் உங்கள் மாதவிடாய் இரண்டு மூன்று மாதங்களுக்கு தாமதமானல் "அமினேன்" "Aminon" கெப்சூல்ஸ் பாவித்துப் பலனடையுங்கள். அபாயமற்ற கட்டாய உடன் நிவார[illegible] அளிக்கும்.

விலை ரூ. 20/50.

துர்ப்பழக்கத்தினலோ அதிக தாம்பத்திய உறவினலோ இழந்த வீரியத்தையும் ஆண்மையையும் (Sexual Debility) திரும்பப் பெற "விக்கடோன்" மருந்துகளைப் பாவித்துப் பலன் பெறுங்கள். உட்பிரயோகம் (Vikoton Oral) விலை ரூபா 23-90. வெளிப் பிரயோகம் (Vikoton Ointment) விலை ரூபா 14-90. தபால் செலவு சதம் 90. வி. பி. பி. ஆர்டர் ஏற்றுக் கொள்ளப்படும்- (விசேஷ வைத்திய ஆலோசனைகளுக்கு நேரில் எங்கள் பிரதா[illegible] பெண் டாக்டரை நாடுங்கள்.

**எஸ். டி. இன்டஸ்ட்ரீஸ்,**

65, மாளிகாவத்தை ரோடு, ம[illegible]தானை.

(புதிய வீடமைப்புத் திட்டத்திற்கு அருகில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர் முறையில் தோல்வியுற்ற

# பயங்கரவாதிகள் சேதம் ஏற்படுத்துகின்றனர்

## எங்கும் சரணுகதி

தமது போர் முறையில் தோல்வி அடைந்த பயங்கரவாதிகள், பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதில் தீவிரம் கொண்டுள்ளதாக பாதுகாப்பு, வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலும் பயங்கரவாதிகள் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்து வருகின்றனர்.

அநுராதபுரத்தில் 33 பயங்கரவாதிகள் நேற்றுச் சரணடைந்தனர். இதுவரை இங்கு மொத்தம் 86 பேர் சரணடைந்துள்ளனர்.

நெலுந்தெனியாவில் இராணுவத்தினரிடம் 30 பேரும், சேருவிலப் பொலீஸில் 19 பேரும் சரணடைந்துள்ளனர்.

பதவியாவில் சரணடைந்த 13 பயங்கரவாதிகள், பதவியா பொலீஸ் நிலையத்தைத் தாமே தாக்கியதாக ஒப்புக் கொண்டுள்ளனர்.

பொலன்னறுவையில் 14 பேர் சரணடைந்ததுடன் கைக்குண்டுகள், வெடி மருந்துகள் இருப்பு பற்றிய தகவல்களையும் கொடுத்தனர்.

கிரித்தலையில் வீதி மட்டத்துக்குக் கீழ் புதைக்கப்பட்டிருந்த கைக்குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டு, அழிக்கப்பட்டன.

மாத்தளை, குருநாகல், தெனியாயவிலும் பலர் சரணடைந்தனர்.

கடுகண்ணுவைப் பொலீஸ் நிலையத்தைத் தாக்குவதற்குப் பொறுப்பாயிருந்த பயங்கரவாதிகளிற் சிலர் பொலன்னறுவையில் வைத்துச் சரணுகதி அடைந்தனர். இவர்கள் மாவனல்லையைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்பட்டது.

அரசாங்கத் திட்டத்திற்கு அமைய, இன்றிலிருந்து 4-ந் திகதி வரை பெருந்தொகையான பயங்கரவாதிகள் சரணுகதி அடைவர் எனவும், இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன என்றும் இராணுவ வட்டாரம் தெரிவித்துள்ளது. (த-15)

## ஐ. தொ. கா. தலைவரின் மே தினச் செய்தி

"தோட்டத் தொழிலாளர் வர்க்கத்திற்கும், இந்நாட்டிலுள்ள ஏனைய தொழிலாளர்களுக்கும் இம் மேதினம் மிகவும் முக்கியமானதாகும், துரதிருஷ்டவசமாக இந்நாட்டில் எழுந்துள்ள, ஜனநாயகத்திற்கு எதிரான சக்திகளின் வெளிப்பாடுகளால் இவ்வாண்டு மே தினத்தைக் கொண்டாட முடியாது போய் விட்டமை வருந்தக் கூடிய செயலாகும்"

ஐ. தொ. கா. தலைவரும் நியமன எம். பியுமான ஜனுப் ஏ. அஸீஸ் விடுத்துள்ள மேதினச் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது மேதினச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"தோட்டத் தொழிலாளர்கள் கடந்த காலங்களில், ஒதுக்கப்பட்டு வந்ததைப் போன்று மக்களரசாங்கத்தின் கீழ் நடைபெறவில்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கும், ஏனைய தொழிலாளர்களுக்கும் நல்லதோர் வாழ்க்கை நிலையினை நல்க தொழிலமைச்சரால் கமிட்டி ஒன்று நியமனம் செய்து அக்கமிட்டி தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் ஆலோசனைகளைச் செய்து வருகிறது. தொழிற் சங்கப் பிரதிநிதி ஒருவர் தனது சங்க அங்கத்தவர்களைத் தோட்ட நிர்வாகத்தின் அனுமதியின்றி தோட்டத்தினுள் சென்று சந்திக்கும் உரிமையினை அளித்தது. ஒரு தோட்டத் தொழிலாளி வேலை நீக்கஞ் செய்யப்பட்டால், தொடர்ந்து நீதிமன்ற தீர்ப்பு வரும் வரையில், அவர் இத்தோட்டத்திலேயே குடியிருக்கும் உரிமையினை அளித்தது. ஊழியர் சேமலாப நிதிக்குத் தோட்ட முதலாளிமார் செலுத்தி வந்த 6 சத வீதத் தொகையை 9 சத வீதமாக உயர்த்தியது. மலையகத்தில், படித்துப் பட்டம் பெற்ற 13 இளைஞர்களுக்கு ஆசிரியர் வேலை தந்தது.

"இந்த நிலையில், ஐ. தொ. கா. தோட்டத் தொழிலாளர்களுக்குப் பஞ்சப்படி 17.50 கோரி, சம்பள நிர்ணய சபையில் பிரேரணை சமர்ப்பித்துள்ள அதே வேளையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், தொழில் அமைச்சரையும், பிரதம மந்திரியையும், இது சம்பந்தமாக வற்புறுத்தி வருகின்றது.

"இன்று, இந்நாட்டில் ஜனநாயகத்திற்கும் பாராளுமன்ற பாரம்பரியத்திற்கும் ஏற்பட்ட பேராபத்து நீக்கப்பட்டு விட்டது. தவருக வழி நடத்தப்பட்ட இளைஞர்களினுல் ஏற்பட்ட பாரிச சம்பவங்களுக்கு நாம் வருந்துகிருேம், எனினும் கூட, அரசாங்கத்தினதும், எனது வேண்டுகோளையும் ஏற்று, சொத்துக்களையும், அரசாங்க அலுவலகங்களையும், காப்பாற்றி வரும் தொழிலாளர் வர்க்கத்தினை நான் பெரிதும் பாராட்டுகிறேன்"


## நகல்கள் எடுக்க வேண்டுமா?

உங்களுடைய எல்லா

விண்ணப்பப் பாரங்கள்

தகவல் தொகுப்புகள்

சுற்றறிக்கைகள்

ஏடுகள் - சுவடிகள்

முதலியனவற்றை நாங்கள் பிரதி எடுத்துத் தருவோம்.

அழகான பதிப்பு குறைந்த கட்டணம்.

சிரிசர வித்தியாலய லிமிட்.,

த. பெ. இல. 1070

185, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-11.


## சுவீப் முடிவுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா 252 ரூபா 30 சத வீதம் 100 ஆறுதல் பரிசுகளைப் பெறும் டிக்கட்டுகளின் இலக்கங்கள் வருமாறு:—

A

17 A 0307 — 24 A 0905
24 A 0388 — 05 A 0438
02 A 0813 — 22 A 0736
11 A 0047

B

22 B 0018 — 16 B 0117
12 B 0805 — 16 B 0965
01 B 0503

C

25 C 0605 — 07 C 0971
14 C 0025 — 24 C 0295
04 C 0343 — 14 C 0540

D

13 D 0393 — 18 D 0515
21 D 0275 — 27 D 0770
27 D 0853

E

08 E 0819 — 19 E 0331
21 E 0745 — 13 E 0851

F

16 F 0824

G

13 G 0461 — 25 G 0307
16 G 0396

H

11 H 0381 — 16 H 0718
25 H 0129 — 16 H 0093
26 H 0829 — 04 H 0091

J

04 J 0550 — 09 J 0623
16 J 0047 — 02 J 0007
15 J 0005 — 23 J 0213

K

06 K 0354 — 14 K 0683
02 K 0896

L

04 L 0620 — 27 L 0065

M

09 M 0059 — 06 M 0134
12 M 0077 — 18 M 0184
17 M 0405

N

06 N 0718 — 11 N 0591
05 N 0367

O

24 O 0991 — 16 O 0512
09 O 0556 — 23 O 0074
21 O 0537

P

11 P 0271 — 22 P 0071

Q

24 Q 0521 — 05 Q 0362
05 Q 0330 — 25 Q 0036

R

03 R 0097 — 12 R 0132
20 R 0611

S

22 S 0224 — 21 S 0851
21 S 0079 — 01 S 0029
24 S 0576

T

17 T 0045 — 08 T 0912
14 T 0159 — 02 T 0130
22 T 0653

U

17 U 0956 — 06 U 0737
23 U 0341 — 02 U 0765

V

21 V 0609 — 16 V 0430
14 V 0034

W

22 W 0341 — 05 W 0303
12 W 0134 — 09 W 0133
02 W 0674

X

19 X 0973 — 22 X 0301
03 X 0970 — 02 X 0387

Y

06 Y 0653 — 05 Y 0003
19 Y 0639

Z

09 Z 0917

## ஊரடங்கு சட்டத்தை மீறிய பெண்

ஊரடங்குச் சட்டத்தை மீறித் தெருவில் நடமாடிய இளம் பெண்ணொருத்தி 250 ரூபா பிணையில் வெளிச் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கல்கிசையில் உள்ள தெருவொன்றில் எம். பிரினு என்ற இளம் பெண் இம்மாதம் 11-ம் திகதி மாலை 5.50 மணியளவில் நடமாடினுராம். அவரைப் பொலீஸார் மறித்து கேள்விகள் கேட்ட போது உரிய பதில்கள் அளிக்கத் தயங்கினுராம்.

அவரைப் பொலீஸார் கைது செய்து கொழும்பு தெற்கு நீதவான் திரு. ஜோர்ஜ் அத்துருப்பாரு முன்னிலையில் ஆஜர் செய்தனர். அவரை 250 ரூபா பிணையில் செல்ல நீதவான் அனுமதித்தார். (3)

இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், குணசேன மாவத்தை, கொழும்பு -12 (இலங்கை). வெளியிட்ட திகதி மே 1 1971.

'Thanthi'. 5. Gunasena Mawatha, Colombo—12. (Ceylon)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org